முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1579

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.01.2024,** வியாழக்கிழமை

1. ஞான ஒளிகண்ட அரங்கனே
ஞான வெளிகண்ட தேசிகனே
வானவர்கள் போற்றுகின்ற ஞானத்தை
வையகத்தில் மக்களுக்கு அருளவந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் 11 ம் நாள், 25.01.2024, வியாழக்கிழமை)
வரமென அரங்கன் திருவடி பற்றி
வையகத்தார் ஞானம் பயின்றால்
3. பயிலுகின்ற மக்களுக்கெல்லாம் இலகுவாக
பழுதின்றி ஞான சித்தி உறுதியாகும்
தயவாக அரங்கன் மேற்கொள்கின்ற
தர்ம ஞான அன்னதான வழிகளை
4. வழிகளை உலகோர் ஏற்று
வையகமெங்கும் முன்மொழிந்து
கிளை சங்கங்களாக உருவெடுத்து
ஆங்காங்கே தர்மபெருக்கம் செய்தால்
5. செய்திட தர்மத்தின் வழி
செப்பிடுவேன் சுப்ரமணியர் யானும் இறங்கி
ஐயமற அவர்களுக்கெல்லாம் ஞான சித்தி
ஆற்றலாக அரங்கன் சீடர்கள் என்கின்ற அடையாளத்தோடு
6. அற்புதமாய் வழங்கி இனிதே
அகிலத்தில் ஞானவான்கள் படை பெருக்கி
அகிலமெங்கும் ஞானிகள் எண்ணிக்கை
மிகுதிபட ஞான ஆட்சிதனை

7. அரங்கன் அவதார நோக்கமாக
   ஆறுமுகன் யான் நடத்தி அருள்வேன்
   அருளவே அரங்க ஞானி திருவடி பற்றி
   அகிலத்தார் ஒன்றிணைய
8. பெருமளவில் உலகமெல்லாம் ஞானவான்கள் என்கின்ற
   பேரடையாளம் பெருகி இனிதே
   கலியுகத்தில் அரங்கன் ஆசிபட அற்புதம் சடுதி
   ஞான யுகமாற்றமாக ஞான ஆட்சிக் காலமாக உருவாகும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–